**A–8490**

| Sub. Code |
|---|
| 4BTA1C1 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**First Semester**

**தமிழ்**

**இக்கால இலக்கியம்**

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் **ஒரு சொல்** தொடரில் விடை தருக.

1. எதனை மேடுறுத்தி வீதி சமைப்போம் என்று பாரதியார் சுட்டுகின்றார்?

2. 'பெருங்கொலை வழியாம் போர் வழி யிகழ்ந்தார்' – யார் கூற்று? யாரைச் சுட்டுகின்றார்?

3. வாலியின் இயற்பெயர் மற்றும் அவரின் படைப்புகள் இரண்டினை எழுதுக.

4. 'நிஜ கோவிந்தம்' கவிதையின் கரு யாது?

5. கந்தசாமிப் பிள்ளை நடத்தும் இதழ் மற்றும் அதன் ஆயுள் சந்தா யாது?

6. வைரவன் பிள்ளையின் குடும்பம் குறித்தெழுதுக.

7. 'ஆத்தங்கரை ஓரம்' புதினத்தில் இடம்பெறும் கிராமம் எது?

8. ஆத்தங்கரை ஓரம் புதினத்தில் நரபலியிடப்படும் மனிதன் யார்?

9. மருதுபாண்டியன் நாடகத்தின் ஆசிரியர் யார்?

10. முத்துவடுக நாதனின் மனைவி பெயர் என்ன?

பகுதி ஆ (5 × 5 = 25)

**ஒருபக்க** அளவில் விடை தருக.

11. (அ) தமிழ்த்தாய் பற்றி பாரதியார் குறிப்பிடுவன யாவை?

(அல்லது)

(ஆ) பாரதிதாசன் 'இன்பத் தமிழ்' குறித்து சுட்டும் கருத்துக்களை எழுதுக.

12. (அ) 'நேற்றும் இன்றும்' கவிதை சுட்டும் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'ஒரு மழை நாளில்' எனும் கவிதையில் வாலி குறிப்பிட்ட கருத்துக்களை விவரி.

13. (அ) இயந்திரமயமாகிவிட்ட மனிதர்களின் நிலையினை 'இது மெஷின் யுகம்' சிறுகதை வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) வாழ்வின் நடப்பு நிலையினை 'பொன்னகரம்' சிறுகதை வழி எடுத்துரைக்க.

14. (அ) ராதா படேங்கர் பாத்திரம் படைப்பினை ஆய்க.

(அல்லது)

(ஆ) சீமனின் போராட்ட குணத்தை விவரி.

15. (அ) முத்து வடுக நாதரின் பாத்திரம் பண்பை விளக்குக.

(அல்லது)

(ஆ) காளையார் கோயில் போர்குறித்து எழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. தமிழின் இனிமையாகப் பாரதிதாசன் சுட்டும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

17. இக்காலச் சமூக நிலையினை 'நிஜ கோவிந்தம்' கவிதைத் தொகுப்பு வழி ஆய்க

18. மனிதர்களின் மனநிலையின்மை 'கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்' சிறுகதை வழி எடுத்துரைக்க.

19. இன்றைய அரசியல் எதார்த்த நிலையினை 'ஆத்தங்கரை ஓரம்' புதினம் புலப்படுத்தும் நெறியினை விளக்குக.

20. மருது சகோதரர்களின் வீரச் சிறப்பினை மருதுபாண்டியன் நாடகம் வழி புலப்படுத்துக.

———————

**A–8491**

| Sub. Code |
|---|
| 4BTA1C2 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**First Semester**

தமிழ்

தமிழ் இலக்கிய வரலாறு

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**எல்லா** வினாக்களுக்கும் **ஒரிரு** தொடர்களில் விடை தருக.

1. ‘அகநானூறு’ எத்தனைப் பிரிவுகளை உடையது?

2. ஆற்றுப்படை நூல்களின் பெயர்களை எழுதுக.

3. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஏதேனும் நான்கு அறநூல்களின் பெயர்களை எழுதுக.

4. களவழி நாற்பது–சிறு குறிப்பு வரைக.

5. தேவாரம் பாடிய மூவர் யாவர்?

6. முதல் மூன்று ஆழ்வார்கள் யாவர்?

7. ஐஞ்சிறுங்காப்பியங்கள் யாவை?

8. சிலப்பதிகாரத்தின் மூன்று உண்மைகள் யாவை?

9. சூரிய நாராயண சாஸ்திரியார்–சிறு குறிப்பு வரைக.

10. சிறுகதையின் இலக்கணம் யாது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**எல்லா** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) எட்டுத்தொகையில் புறநானூற்றின் சிறப்புக் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சிறுபாண் ஆற்றுப்படையில் நல்லியக்கோடனின் பெருமைகளை எடுத்துரைக்க.

12. (அ) இன்னா நாற்பது, இனியவை நாற்பது பற்றி விவரி.

(அல்லது)

(ஆ) ஆசாரக்கோவை, திரிகடுகம் பற்றி விவரி.

13. (அ) ஆண்டாளின் பக்திச் சிறப்பை விளக்குக.

(அல்லது)

(ஆ) தாயுமானவரின் பக்தித் தொண்டினை விவரித்து எழுதுக.

14. (அ) 'சீவக சிந்தாமணி' காப்பியம் உணர்த்தும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சேக்கிழாரின் பெரியபுராணம் குறித்து எழுதுக.

15. (அ) புதுக்கவிதையின் இன்றைய வளர்ச்சி நிலை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) இருபதாம் நூற்றாண்டில் நாடகத்தின் வளர்ச்சி நிலைக் குறித்தெழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக் கட்டுரை** வடிவில் விடை தருக.

16. எட்டுத்தொகை நூல்களுள் அக இலக்கியங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

17. திருக்குறளின் சிறப்புகளை விவரித்து எழுதுக.

18. சைவ சமயக் குரவர் நால்வரின் பக்தித் திறத்தினை விளக்குக.

19. ‘இரட்டைக் காப்பியங்கள்’ குறித்து விவரித்து எழுதுக.

20. உரைநடையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரை வரைக.

**A–8492**

**Sub. Code**
**4BTA2C1**

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Second Semester**

தமிழ்

பக்தி இலக்கியம்

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு சொற்களில்** விடை தருக.

1. 'தோடுடைய செவியன்' - இக்கூற்று யாரைக் குறிப்பிடுகிறது?

2. 'இணையடி' - விளக்கி வரைக.

3. ஏழாம் திருமுறையை அருளிச் செய்தவர் யார்?

4. 'ஆத்துமசுத்தி' - குறிப்பு வரைக.

5. 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி'-இத்தொடர் யாரைக் குறிப்பிடுகிறது?

6. நம்மாழ்வாரின் வேறு பெயரினைக் குறிப்பிடுக.

7. இரட்சணிய யாத்திரிகம்-இந்நூலின் ஆசியர் பெயர் என்ன?

8. 'கண்ணி' - விளக்கம் தருக.

9. 'அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை'-இக்கூற்று யாருடையது?

10. தாயுமானவர் - சிறு குறிப்பு தருக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விரிவான விடை தருக.

11. (அ) பிரம்மபுர இறைவனின் அருள்தன்மையினை விளக்குக.

(அல்லது)

(ஆ) திருநாவுக்கரசரின் பக்திச்சிறப்பினைப் புலப்படுத்துக.

12. (அ) திருக்காளத்தி இறைவனிடம் சுந்தரர் கொண்ட பக்தியினை வெளிப்படுத்துக.

(அல்லது)

(ஆ) திருவாசகம் உணர்த்தும் இறைபியல்புகளை விவரிக்க.

13. (அ) ஆண்டாளின் பக்தி உணர்வினைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) பெரிய திருவந்தாதி உணர்த்தும் இறையருட்தன்மைகளை விவரி.

14. (அ) இரட்சணிய யாத்திரிகம் மூலம் அறியலாகும் கருத்துக்களைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) றகுமான் கண்ணியில் குணங்குடியார் விளக்குவன யாவை?

15. (அ) நற்றுணை விளக்கமாக வள்ளலார் குறிப்பிடுவன யாவை?

(அல்லது)

(ஆ) தாயுமானவர் உணர்த்தும் தத்துவக் கருத்துக்களைப் புலப்படுத்துக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. சம்பந்தர் தேவாரத்தின் சிறப்பியல்புகளைக் கட்டுரைக்க.

17. மாணிக்கவாசகர் உணர்த்தும் இறைச்சிந்தனைகளை நிரல்படுத்துக.

18. நம்மாழ்வார் குறிப்பிடும் திருமாலின் பெருமைகளை விவரிக்க.

19. 'நிலைகேடனாதியர் விவரணப்படலம்' சுட்டும் செய்திகளைப் புலப்படுத்துக.

20. பொருளியல்புகளாகத் தாயுமானவர் குறிப்பிடுவனவற்றை விளக்கி வரைக.

**A–8493**

**Sub. Code**
**4BTA2C2**

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Second Semester**

**தமிழ்**

**இலக்கணம் – நன்னூல் – எழுத்து**

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. பொதுப்பாயிரத்தின் இலக்கணம் யாது?

2. தெளிந்த புலமை பெற நன்னூல் கூறும் வழியினைக் கூறுக.

3. முதலெழுத்து எத்தனை?

4. மொழிக்கண் நிற்கும் இறுதி எழுத்து போலியாக வருவது எப்படி?

5. பகுபத உறுப்புக்கள் யாவை?

6. நிகழ்கால வினைமுற்றின் இடைநிலைகள் யாவை?

7. வினாப்பெயர், விளிப்பெயர்கள் முன் வல்லினம்வரின் எவ்வாறாகும்?

8. 'தெங்கு' என்ற சொல்லின் புணர்ச்சி நிலை என்ன?

9. 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' – இந்நூற்பாவை விளக்குக.

10. பொதுச் சாரியைகளாக வருவன யாவை?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க அளவில்** விடை தருக.

11\. (அ) நூல் தவிர்க்க வேண்டிய பத்துக் குற்றங்கள் யாவை?

(அல்லது)

(ஆ) ஆசிரியர் ஆகாதவர் யாவர்?

12\. (அ) இன எழுத்துக்கள் யாவை?

(அல்லது)

(ஆ) சந்தியக்கரம் என்றால் என்ன? விளக்குக.

13\. (அ) பதப்புணர்ச்சியில் பண்புப் பெயர்கள் அடைய விகாரங்கள் யாவை?

(அல்லது)

(ஆ) விகுதியும் காலம் காட்டும் என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

14\. (அ) 'ஒரு மொழி மூவழிக் குறைதலும் அனைத்தே' – விளக்குக.

(அல்லது)

(ஆ) திசையொடு திசைச் சொற்களும் பிற சொற்களும் புணரும்போது ஏற்படும் மாற்றங்களை உதாரணத்துடன் விளக்குக.

15\. (அ) 'கல்' 'முள்' ஆகிய லகர ளகர வீற்றுச் சொற்களின் புணர்ச்சி நிலை யாது?

(அல்லது)

(ஆ) சாரியைக்குரிய புறனடை நூற்பாவை விளக்குக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு கட்டுரை வடிவில்** விடை தருக.

16. ‘உத்தியெண் நான்கே’ – விளக்குக.

17. உயிரளபெடை இருபத்தொன்றாதல் எவ்வாறு?

18. வடமொழியாக்கத்தின் சிறப்பு விதிகளைக் கூறி விளக்குக.

19. பொதுப்புணர்ச்சி குறித்துப் பவணந்தியார் கூறுவன பற்றி ஒரு கட்டுரை வரைக.

20. உருபுகள் புணருமாற்றை விளக்கி ஒரு கட்டுரை வரைக.

———————

**A–8494**

**Sub. Code**
**4BTA2C3**

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Second Semester**

தமிழ்

தமிழக வரலாறும் பண்பாடும்

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

எல்லா வினாக்களுக்கும் **ஓரிரு** வரிகளில் விடை தருக.

1. பல்லவர்கள் காலத்தில் எந்த சமயங்கள் மேலோங்கி இருந்தன?

2. பல்லவர்களின் ஓவியக்கலைக்கு ஏதேனும் இரண்டினைச் சான்றாகக் கூறுக.

3. சோழர்கள் காலத்தில் சைவ சமயம் எத்தகைய இடம் பெற்றது?

4. தேவரடியார்கள் – குறிப்பு வரைக.

5. பாண்டிய நாட்டில் மக்கள் செய்த தொழில் முறைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.

6. அக்காலத்தில் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைகள் ஏதேனும் இரண்டினை எழுதுக.

7. திருமலை மன்னனின் ஆட்சிக்காலத்தில் மதுரை மாநகரம் பெற்ற சிறப்பு யாது?

8. சரபோசி மன்னன் – சிறு குறிப்பு வரைக.

9. தமிழக அரசியலில் இராசாசியின் பங்கு யாது?

10. 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் எந்த ஆண்டு யாரால் நடைபெற்றது?

பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் **ஒருபக்க** அளவில் விடை தருக.

11. (அ) பல்லவ சாளுக்கியப் போர்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பல்லவர்கள் காலத்தில் இருந்த சமயநிலை குறித்து எழுதுக.

12. (அ) சோழர்களின் ஆட்சிமுறை, சிறப்பு குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) சோழ மன்னர்களின் நிர்வாகத்தின் தன்மை எத்தகையது என்பதைக் குறிப்பிடுக.

13. (அ) தமிழகத்தில் முஸ்லீம் படையெடுப்பின் விளைவுகள் எவ்வித மாற்றத்தை நிகழ்த்தின?

(அல்லது)

(ஆ) முதலாம் சடையவர்ம சுந்தரபாண்டியனின் போர்ச்சிறப்பு குறித்து எழுதுக.

14. (அ) நாயக்கர் காலத் தமிழகத்தில் கலையும் இலக்கியமும் குறித்து எழுதுக

(அல்லது)

(ஆ) நாயக்கர்களின் ஆட்சிமுறை எவ்வாறு சிறப்புற்று இருந்தது என்பதை விவரிக்க.

15. (அ) சத்தியாகிரக இயக்கக் காலம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) 19–ஆம் நூற்றாண்டில் சமயநிலை குறித்து விளக்குக.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான அளவில் விடை தருக.

16. பல்லவ மன்னர்களின் சிறப்புகளைக் கட்டுரை வடிவில் தருக.

17. சோழர்களின் சமுதாய நிலையினைச் சித்தரித்துக் காட்டுக.

18. தமிழகத்தில் முஸ்லீம்களின் ஆதிக்கம் எவ்வாறு இருந்தது என்பதை எடுத்துரைக்க.

19. நாயக்கர் காலச் சமுதாய நிலை குறித்துக் கட்டுரை வரைக.

20. விடுதலைக்குப் பின் தமிழகம் பெற்றுள்ள வளர்ச்சி நிலைகள் குறித்தெழுதுக.

———————

**A–8495**

**Sub. Code**
**4BTA3C1**

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Third Semester**

தமிழ்

சிற்றிலக்கியம்

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours    Maximum : 75 Marks

பகுதி – அ    (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு சொற்களில்** விடையளிக்க.

1. கலிங்கத்துப் பரணியில் ‘தூணும் உத்திரமும்’ எதனால் செய்யப்பட்டது?

2. ‘வீர வழிபாடு’ என்ற கலிங்கத்துப் பரணி எதனைக் கூறுகின்றது?

3. ‘சுக முனிவர்’ யாருடைய மகனாகக் குறிப்பிடப்படுகிறார்?

4. ‘சாரிகை’ என்பது எந்தப் பறவையின் பெயராகும்

5. ‘திரிகூட மலை’– சிறுகுறிப்பு வரைக.

6. ‘ஆரிய நாடு’ குறிப்பு வரைக.

7. மாறு கண்ணும் பருத்திப்பைக் கூறு வயிறும் உடையவர் யார்?

8. ‘பேய்ப் பண்ணைக்காரன்’ என்பவர் யார்?

9. ‘செங்கீரைப் பருவம்’ என்றால் என்ன?

10. ‘கொற்றமகள்’ என்ற பெயர் எந்த தெய்வத்திற்குரியது?

பகுதி – ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) 'கோயில் இயல்பு' குறித்து கலிங்கத்துப் பரணி கூறும் செய்திகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) கலிங்கத்துப் பரணியில் மகரதோரணம், ஈமவிளக்கு குறித்து எழுதுக.

12. (அ) 'சில பறவைகள் தூது செல்வதற்கு உரியன அல்ல' என்ற கருத்தினை அழகர் கிள்ளை விடு தூது மூலம் விளக்குக.

(அல்லது)

(ஆ) 'திருமாலை எய்தப்போய் ஊசெல்லாம் தூற்றுமலர்' கொண்ட கதையின் சிறப்புக் குறித்து எழுதுக.

13. (அ) சந்திர சூடரின் தென்னாரிய நாடும், கரும்பு வளம் உடைய தென்னாரிய நாடும் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) செண்பகாடவித் துறையின் சிறப்பும் 'பொங்குகடல்' குறித்தும் தொகுத்து எழுதுக.

14. (அ) 'முக்கூடற்பள்ளு' – இடையன் வரவுக் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) 'பண்ணைக்காரணின்' வரவினைச் சிறப்பித்து எழுதுக.

15. (அ) 'முப்பத்து முக்கோடி தேவர்கள்' குறித்துக் காப்புப் பருவத்தில் இடம் பெறும் செய்திகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) 'கனியொடு சுவையமு தொழுகிய'– என்ற சப்பாணிப் பருவப் பாடலின் கருத்துக்களை விளக்குக.

பகுதி – இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் கட்டுரை வடிவில் விடை தருக.

16. காளி கோயிலின் அமைப்பும், வீர மறவர் வழிபாடு குறித்தும் கலிங்கத்துப் பரணி வழி விளக்குக.

17. கிளியின் (கிள்ளை)–யின் பெருமைகள் குறித்துக் கட்டுரை வரைக.

18. குற்றாலக் குறவஞ்சியில் நகர்வளம் குறித்துக் கட்டுரை வரைக.

19. மூத்தப்பள்ளி முறையிட்ட செய்திகளை முக்கூடற்பள்ளு வழி விளக்குக.

20. முத்துக் குமாரசாமி பிள்ளைத்தமிழில் செங்கீரைப் பருவத்தில் ஏதேனும் மூன்று பாடல்களின் கருத்தினைக் குறிப்பிடுக.

———————

**A–8496**

| Sub. Code |
| --- |
| **4BTA3C2** |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Third Semester**

**தமிழ்**

**இலக்கணம் – நன்னூல் – சொல்**

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. தொடர்மொழி என்பது யாது?
2. வினையாலணையும் பெயர் என்பது என்ன?
3. வேற்றுமை என்றால் என்ன?
4. விளியுருபேலாப் பெயர்கள் யாவை?
5. வினைமுற்றாவது யாது?
6. இடைப்பிறவரல் என்பது என்ன?
7. வழு என்றால் என்ன?
8. பொருள்கோள் என்றால் என்ன? அஃது எத்தனை வகைப்படும்?
9. ஏகார இடைச்சொல்லின் பொருள்கள் யாவை?
10. மிகுதி என்னும் குணத்தை உணர்த்தும் உரிச்சொற்களை உதாரணத்தோடு காட்டுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) உயர்திணைப் பெண்பாற் பெயர்களாக நன்னூலார் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) இயல்பு, தகுதி வழக்குகளை விளக்குக.

12. (அ) கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி ஆகியவற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) தற்கிழமை, பிறிதின் கிழமை விளக்கம் தருக.

13. (அ) பெயரெச்சத்தின் இலக்கணத்தை வரையறுக்க.

(அல்லது)

(ஆ) திணை, பால் காட்டும் இடங்கள் பொதுமை நீங்கும் முறை குறித்துக் கூறப்படுவன யாவை?

14. (அ) எண்வகை விடைகள் யாவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) 'இரட்டைக்கிளவி இரட்டிற் பிரிந்திசையா' - விளக்குக.

15. (அ) எண்ணிடைச் சொற்கள் வினையோடு வருவது பற்றிக் கூறுக.

(அல்லது)

(ஆ) சொல் என்னும் ஒரு குணத்தை (பொருளை) உணர்த்தும் உரிச்சொற்களை எழுதுக.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு கட்டுரை** வடிவில் விடை தருக.

16. ஆகுபெயரின் வகைகளைச் சான்றுடன் விரித்துரைக்க.

17. மூன்றாம் வேற்றுமை உருபுகள் கூறி அதன் பொருள்களை விளக்குக.

18. வினைமுற்று குறித்து நன்னூலார் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

19. தொகைநிலைத் தொடர்களின் வகைகளைச் சான்றுகளுடன் விவரிக்க.

20. இடைச்சொல்லின் இலக்கணம் கூறி, அது உணர்த்தும் பொருள்களை விரித்துரைக்க.

———————

**A–8497**

| Sub. Code |
|---|
| 4BTA4C1 |

## B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019

**Fourth Semester**

தமிழ்

காப்பிய இலக்கியம்

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours  Maximum : 75 Marks

பகுதி அ  $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. ‘ஒரு பெருங்கருப்புவில் இருகரும் புருவமாக ஈக்க’ யார் கூற்று? விளக்குக.

2. இடாகினிப் பேய் - குறிப்பு வரைக.

3. இந்திரவிழா தொடங்காவிட்டால் பூதம் புடைத்து உண்ணும்? ஏன்?

4. தருமபீடிகை தோன்றியது எங்கே? யாருக்கு?

5. ‘பாசறைப் பிரிவு தீர்க்கும் பங்குனிப் பருவம் செய்தான்’ - யார் கூற்று?

6. குணமாலையைத் தாரை வார்த்துக் கொடுக்கும் போது குபேரமித்திரன் அளித்த சீதனப் பொருள்கள் எவை?

7. ‘மந்தரை’ என்பதன் பொருள் யாது?

8. ‘மடந்தை தவ்வை யாமெனக் கிடந்தனள்’ - யார்? ஏன்?

9. சீறாப்புராணம் - குறிப்பு வரைக.

10. பிதாவாகிய இறைவன் சூசையை நோக்கி கூறியது யாது?

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கோவலன் கண்ணகியின் நலம் பாராட்டிய முறையினைக் கூறுக.

(அல்லது)

(ஆ) கண்ணகிக்காகவும் வேண்டிய தேவந்தியின் செயல்களை விளக்குக.

12. (அ) உவனத்தின் சிறப்புகளை கூறுக.

(அல்லது)

(ஆ) மணிமேகலை அமுதசுரபியை பெற்ற விதம் யாது?

13. (அ) 'சிலம்படி கைதொழ நோற்பன்' - யார் யாரிடம் கூறியது?

(அல்லது)

(ஆ) கிளியைத் தூதுவிட்ட குணமாலையின் மன இயல்புகளை விளக்குக.

14. (அ) இராமபிரானுக்கு வசிட்டர் கூறிய உறுதிமொழிகளை கூறுக.

(அல்லது)

(ஆ) கூனி கடுஞ்சினம் கொண்டு கைகேயினைச் சேர்ந்தது ஏன்?

15. (அ) உசைனார் உதித்த விதத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) சூசை பெற்ற ஏழு வரங்களை விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு கட்டுரை வடிவில்** விடை தருக.

16. ‘கடலாடு காதையின்’ சிறப்புகளைத் தொகுத்துரைக்க.

17. ஆபுத்திரனின் அருள் உள்ளத்தை விளக்கி வரைக.

18. குணமாலையார் இலம்பகத்தில் சுண்ணங்களின் பெருமையைச் சீவகன் எவ்வாறு கண்டறிந்து கூறினான்?

19. கைகேயின் மனத்தை மந்தரை மாற்றிய திறத்தைப் புலப்படுத்துக.

20. உசைனார் பிறந்த படலத்தின் சிறப்புகளை விளக்கியுரைக்க.

| A–8498 |
|---|

| Sub. Code |
|---|
| 4BTA4C2 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Fourth Semester**

தமிழ்

இலக்கணம் – அகப்பொருள்

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. ஐந்திணைக்கும் உரிய பொருள்கள் யாவை?

2. களவுப் புணர்ச்சி நிகழும் இடம் எது?

3. காவல் பிரிவின் வகைகளை எழுதுக.

4. செலவு அழுங்கற்குரிய காரணம் தருக.

5. தலைவனுக்கு நிகழும் 'ஐயம்' குறித்தெழுதுக.

6. வரைவு கடாதலின் வகைகளைக் கூறுக.

7. வரைவின் இலக்கணம் எழுதுக.

8. ஓதற் பிரிவிற்குரிய ஆண்டு வரையறை தருக.

9. வாயில் வேண்டல் யாருக்கு உரியது?

10. வன்புறை என்றால் என்ன?

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க விடை தருக.

11. (அ) முல்லைத் திணைக்குரிய முதல், கரு, உரிப்பொருள்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) கைக்கிளை குறித்து அகப்பொருள் கூறுவன யாவை?

12. (அ) ஊடலைத் தணிக்கும் வாயில்கள் யாவர்?

(அல்லது)

(ஆ) கற்பில் நிகழும் பிரிவுகளைக் கூறுக.

13. (அ) களவிற்குரிய கிளவித் தொகையினை எடுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) வரைவு கடாதல் - விளக்கம் தந்து விரித்துரைக்க.

14. (அ) தலைவி அறத்தொடு நிற்றலை விவரிக்க.

(அல்லது)

(ஆ) உடன்போக்கு இடையீட்டின் வகைகளை விளக்குக.

15. (அ) உணர்த்த உணரும் ஊடற்குரிய கிளவிகள் யாவை?

(அல்லது)

(ஆ) பரத்தையற் பிரிவின் வகைகளை விளக்குக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. ஐந்திணைக்குரிய கருப்பொருள்களை எடுத்தெழுதுக.

17. கற்பில் நிகழும் பிரிவுகளை விவரிக்க.

18. இரவுக்குறி இடையீடு - விளக்குக.

19. அறத்தொடு நிற்றலின் வகைப்பாட்டினை எழுதுக.

20. பிரிவின் வகைகளை விரித்தெழுதுக.

———————

WS8

| A–8499 |
|---|

| Sub. Code |
|---|
| 4BTAE1B |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Fourth Semester**

**தமிழ்**

விருப்பப்பாடம் – பெண்ணியம்

**(CBCS – 2014 onwards)**

Time : Three Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு** சொற்களில் விடை தருக.

1. பாலியல் அரசியல் என்பது ஆண் பெண் உறவுகளின் அதிகாரச் கட்டமைப்பு என்று கூறியவர் யார்?

2. பெண்ணியம் எத்தனை வகைப்படும்?

3. ஆணாதிக்கம் பெண்ணின் வாழ்க்கைப் பணிப் பகிர்வை எதன் அடிப்படையில் நோக்குகிறது?

4. இராஜம் கிருஷ்ணன் எழுதிய புதினத்தின் பெயர் என்ன?

5. சமூகத்தின் ஒழுங்கமைவுகள் விழுமியங்களாக உளவியலில் பாதிக்கின்றன என்றவர் யார்?

6. பெண்ணின் ஆளுமை எதன் அடிப்படையில் ஒடுக்கப்படுகின்றது?

7. பெண்களின் மீதான வன்முறை எத்தனை உட்கூறுகளைக் கொண்டுள்ளது?

8. பாலியல் வன்முறைக்குக் காரணம் என்ன?

9. பெண்கள் இயல்பாகவே பலம் வாய்ந்தவர்கள் என்று கூறியவர் யார்?

10. பெண்ணடிமைத்தனத்திற்கு எதிராக எழுந்த இயக்கத்தின் பெயர் என்ன?

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) தமிழ் இலக்கியத்தில் பெண்ணியக் கூறுகள் இடம் பெறுமாற்றை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பெண்ணியம் விளக்குக.

12. (அ) பெண்ணின் சமூகத் தகுதி நிலை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) சமூக மயமாக்கல் என்றால் என்ன?

13. (அ) பெண்ணியமும் ஆளுமையும் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) ஆளுமை என்றால் என்ன? விளக்குக.

14. (அ) சமூக வன்முறையில் ஆண்களின் செயல் ஊக்கங்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பெண்களின் மீதான உழைப்புச் சுரண்டலை எடுத்துரைக்க.

15. (அ) பாலியல் விடுதலை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) 'குடும்பத்தின் வேர் பொருளாதாரம்' என்பதை நிறுவுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கும் மட்டும் **மூன்று பக்க** அளவில் விடை தருக.

16. பெண்ணிய வகைகளை விளக்கி எழுதுக.

17. அரசியலில் பெண்கள் நிலை குறித்து இராஜம் கிருஷ்ணன் கருத்துக்களை எடுத்துரைக்க.

18. பண்பாட்டுச் சார்பு ஆளுமைப் பாத்திரங்கள் புதினங்களில் இடம் பெறுமாற்றை விவரிக்க.

19. பெண்களின் மீதான வன்முறைக் களங்களை விரிவாக எடுத்துரைக்க.

20. பெண்ணே பெண்ணிற்கு எதிரியா? ஆராய்க.

WS9

| A–8500 |
|---|

| Sub. Code |
|---|
| 4BTA5C1 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Fifth Semester**

தமிழ்

அற இலக்கியம்

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. திருக்குறளை இயற்றியவர் யார்?
2. திருவள்ளுவரின் வேறுபெயர்கள் யாவை?
3. பழமொழி எத்தனைப் பாடல்களைக் கொண்டது?
4. பழமொழி நானூறில் அமைந்துள்ள பழமொழிகளில் ஏதேனும் ஒன்றை எழுதுக.
5. நாலடியாரைத் தொகுத்தவர் யார்?
6. 'ஈகை' என்பதன் பொருள் யாது?
7. இனியவை நாற்பதின் ஆசிரியர் யார்?
8. பதினெண்கீழ்க்கணக்கில் அறநூல்கள் எத்தனை?
9. உலகநாதர் இயற்றிய நூல் எது?
10. ஏதேனும் ஒரு நீதி இலக்கியத்தின் பெயரைச் சுட்டுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) அறிவின் சிறப்புக்களை வள்ளுவர் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) குறிப்பு வரைக : திருவள்ளுவர்.

12. (அ) பழமொழி நானூற்றின் சிறப்புக்களை நிரல்படுத்துக.

(அல்லது)

(ஆ) அறிவின் மாட்சியின் சிறப்புக்களை பழமொழி வழி நயப்படுத்துக.

13. (அ) குடிப்பிறப்பின் பெருமைகளை நாலடியார் எங்ஙனம் மொழிகிறது.

(அல்லது)

(ஆ) கற்புடைய மகளிரின் மாண்பைத் தெளிவாக எடுத்துரைக்க.

14. (அ) இனியவை நாற்பதின் சிறப்புக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) வாழ்க்கைக்கு எவை எவை இனியவை என்று இனியவை நாற்பது சுட்டுகிறது? ஏதேனும் ஒரு பாடல் மூலம் எடுத்துரைக்க.

15. (அ) 'ஓதாமல் ஒரு நாளும்' என்ற பாடலின் நீதிக்கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'நன்னெறி' நூலின் பெருமைகளை நயமாக எடுத்துரைக்க.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. அடக்கத்தின் சிறப்புக்களை வள்ளுவர் வழி விளக்கி வரைக.

17. பழமொழி நானூறு சுட்டும் கல்வியின் பெருமைகளை ஆராய்க.

18. அறம், கல்வி, மானம் குறித்து நாலடியார் சுட்டுகின்ற கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

19. இன்னா நாற்பது பாடல்கள் தரும் கருத்துக்களைக் கட்டுரைக்க.

20. ‘உலக நீதி’ ஒரு ஒப்பற்ற நூல் என்பதைச் சான்றுகளுடன் எழுதுக.

**A–8501**

**Sub. Code**
**4BTA5C2**

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Fifth Semester**

**தமிழ்**

**இலக்கணம் – புறப்பொருள்**

**(CBCS – 2014 onwards)**

Time : Three Hours                    Maximum : 75 Marks

பகுதி – அ                    (10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. விரிச்சி என்பதன் பொருள் யாது?

2. வெட்சித்திணையின் மொத்த துறைகள் எத்தனை?

3. வஞ்சித்திணை என்றால் என்ன?

4. வஞ்சினம் என்பதற்குப் பொருள் கூறுக.

5. ஊர்ச்செரு என்ற துறைக்குச் சான்று தருக.

6. கந்தழி என்ற துறையின் கொளுவை எழுதுக.

7. நூழில் என்றால் என்ன?

8. அரவம் என்ற சொல் உணர்த்தும் பொருள் யாது?

9. பாடாண் திணை – பிரித்து விளக்கம் தருக.

10. ஆற்றுப்படை – விளக்கம் கூறுக.

பகுதி – ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) குறிப்பு வரைக: புறத்திறை, பாதீடு.

(அல்லது)

(ஆ) ஆளெறிபிள்ளை, பிள்ளைத்தெளிவு குறித்து எழுதுக.

12. (அ) மாராய வஞ்சி என்றால் என்ன? சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) பேய்க்காஞ்சி குறித்து விளக்கி எழுதுக.

13. (அ) குதிரை மறம், எயிற்போர் ஆகிய துறைகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) முற்றுழிஞை பற்றி எடுத்துரைக்க.

14. (அ) நூழில் ஆட்டு குறித்து நிரல்படுத்துக.

(அல்லது)

(ஆ) வாகைத்திணை என்றால் என்ன? ஏதேனும் ஒரு துறையை விளக்குக.

15. (அ) இயன்மொழி வாழ்த்து குறித்து விரிவாக எழுதுக.

(அல்லது)

(ஆ) கைக்கிளை, பெருந்திணை குறித்துச் சான்றுகளுடன் எழுதுக.

பகுதி – இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. கரந்தைத்திணையும், அதன் துறைகளையும் கட்டுரைக்க.

17. காஞ்சித் திணையின் துறைகளை விளக்கி வரைக.

18. உழிஞைத் துறைகளை ஆய்க.

19. தும்பைத் திணையின் துறைகளை விரித்துரைக்க.

20. எவையேனும் ஐந்து துறைகளை பாடாண் திணை மூலம் விளக்கி எழுதுக.

**A–8502**

| Sub. Code |
|---|
| 4BTA5C3 |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Fifth Semester**

**தமிழ்**

இலக்கியத்திறனாய்வு

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. இலக்கியம் குறித்து வின்செஸ்டரின் கருத்தை எழுதுக.

2. மொழி என்றால் என்ன?

3. 'இலக்கியத் திறனாய்வின் பொற்காலம்' என்று எந்த நூற்றாண்டைக் குறிப்பிடலாம்?

4. திறனாய்வு வகைகள் எத்தனை?

5. அணுகுமுறை என்பது யாது?

6. உளவியல் என்றால் என்ன?

7. கவிதையின் கூறுகளை எழுதுக.

8. 'நாவல்' தமிழில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

9. தற்காலத் தமிழ் இலக்கியத் திறனாய்வாளர்களின் நோக்கம் யாது?

10. இலக்கியத் திறனாய்வாளர்கள் யார்?

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) இலக்கியக் கலை என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) உத்திகள் குறித்து எழுதுக.

12. (அ) இலக்கியத் திறனாய்வின் பயன்பற்றி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) திறனாய்வாளருக்குரிய தகுதிகள் யாவை?

13. (அ) அணுகுமுறைகளுள் ஏதேனும் ஒன்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) உளவியல் அணுகுமுறைக்குச் சான்று பகர்க.

14. (அ) தற்காலக் கவிதையின் பயன்பாட்டைக் கூறுக.

(அல்லது)

(ஆ) புதினத்தின் உள்ளடக்கம் குறித்து விரிவாக எழுதுக.

15. (அ) குறிப்பு வரைக : க.நா.சு.

(அல்லது)

(ஆ) நல்ல திறனாய்வாளர் யார்? சான்றுகளுடன் விளக்குக.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. இலக்கியக் கலையின் நோக்கம், பயன்பாடு குறித்து ஆராய்க.

17. திறனாய்வின் வகைகளுள் எவையேனும் ஐந்தினை மட்டும் விளக்குக.

18. பல்வேறு அணுகுமுறைகள் குறித்து விரித்துரைக்க.

19. சிறுகதையின் கட்டமைப்புக் கூறுகளைக் கட்டுரைக்க.

20. மு.வ.வின் திறனாய்வுப் பணிகளை மதிப்பிடுக.

**A–8503**

| Sub. Code |
|---|
| 4BTAE2A |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Fifth Semester**

தமிழ்

விருப்பப்பாடம் – சுற்றுலாவியல்

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு சொற்களில்** விடை தருக.

1. சுற்றுலா செல்வது எந்த நூற்றாண்டில் மலர்ச்சியுற்றது?

2. 'பல்வேறு வகையான நடவடிக்கைகளின் மொத்தத் தொகையே சுற்றுலா' என்று கூறியவர் யார்?

3. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?

4. மார்க்கோ போலோ பிறந்த ஊர் எது?

5. சுற்றுலாப் பயணிகளை எத்தனை வகைகளில் அளக்கலாம்?

6. நிலப் போக்குவரத்து எத்தனை வகைப்படும்?

7. வழிகாட்டிக்கு எது முதன்மைத் தேவை?

8. தெய்வம் தொடர்பான நூல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

9. சுற்றுலா எத்தனை வகைப்படும்?

10. தோடி நிவர்த்தித் தலங்கள் இரண்டினைக் கூறுக.

### பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க அளவில்** விடை தருக.

11. (அ) தொழில் புரட்சியில் சுற்றுலா வளர்ச்சி குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சுற்றுலாவின் தன்மைகள் குறித்து விளக்குக.

12. (அ) யுவான் சுவாங், பாகியான் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழகத்தில் உள்ள கோயில்களின் சிறப்புகளை எடுத்துரைக்க.

13. (அ) உலகச் சுற்றுலாக் கழகத்தின் செயற்பாடுகளை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) சாலைப் போக்குவரத்தின் வளர்ச்சியை மதிப்பிடுக.

14. (அ) பயண நூல்கள் குறித்துக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) பயண இலக்கியத்தின் பயன்பாடுகளை எடுத்துரைக்க.

15. (அ) தமிழகத்தில் உள்ள ஆறுபடை வீடுகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழகத்தில் உள்ள அருவிகளைப் பட்டியலிடுக.

### பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான விடை தருக.

16. சுற்றுலாவில் ஏற்படும் தடைகளை விளக்கி வரைக.

17. மலைகளும் கோடைக் குடியிருப்புகளும் பற்றிக் கட்டுரைக்க.

18. பயண முகவர்களின் பணிகளைத் தொகுத்து எழுதுக.

19. வழிகாட்டியின் பண்புகளைத் தொகுத்துரைக்க.

20. தமிழகப் பறவைகள் சரணாலயங்கள் பற்றி விளக்குக.

---

**A–8504**

| Sub. Code |
| --- |
| 4BTAE2B |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Fifth Semester**

தமிழ்

விருப்பப்பாடம் – கவின்கலைகள்

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours — Maximum : 75 Marks

பகுதி அ — $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு சொற்களில்** விடை தருக.

1. நாடகம் எத்தனை வகைப்படும்?

2. குகைக் கோயிலை அமைக்கும் புதிய முறையை ஏற்படுத்தியவர் யார்?

3. பிரதிமை உருவங்கள் என்றால் என்ன?

4. ஜைன சமயத்தில் எத்தனை தீர்த்தங்கரர் உருவங்கள் உள்ளன?

5. பஞ்ச பாரதீயம் என்னும் நூலை இயற்றியவர் யார்?

6. இசைக்குரிய ஓசைகளின் எண்ணிக்கை எத்தனை?

7. ஆடல் கலைக்குரிய பாட்டுக்கு என்ன பெயர்?

8. மகளிர் ஆடுகின்ற கூத்திற்குப் பெயர் என்ன?

9. புலவர் காவியத்தை எவ்வாறு இயற்ற வேண்டும்?

10. சூளாமணியை இயற்றியவர் யார்?

**பகுதி ஆ** (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) ஓவியம் குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) கற்றளிகள் குறித்து எழுதுக.

12. (அ) உருவங்களின் நால் வகைப்பிரிவுகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சோழர் பிரதிமைகள் பற்றி எழுதுக.

13. (அ) கீர்த்தனைகள் குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) பரிபாடலில் இசைக்கூறுகள் பொதிந்துள்ளதை வெளிப்படுத்துக.

14. (அ) கூத்து நூல்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பரத நாட்டியத்தில் முகக் குறிப்புகளை எடுத்துரைக்க.

15. (அ) காவியத்தில் சுவை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) இடைக்கால இலக்கியங்கள் தரும் செய்திகளைக் குறிப்பிடுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** விரிவான விடை தருக.

16. கோயிலின் வகைகளை விளக்கி வரைக.

17. பல்லவர், சோழர்கால ஓவியங்களின் சிறப்புகளை கட்டுரைக்க.

18. இசைக்கருவிகள் பற்றி விளக்குக.

19. மூன்று வகை வென்றிகளை நிரல்படுத்துக.

20. தமிழ் இலக்கியங்களின் பிரிவுகளை எடுத்துரைக்க.

———————

**A–8505**

**Sub. Code**
**4BTA6C1**

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Sixth Semester**

**தமிழ்**

**சங்க இலக்கியம்**

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு** தொடர்களில் விடை தருக.

1. 'பட்டினப்பாலை' என்ற நூலைப் பாடியவர் யார்?

2. எந்த அரசனின் பெருமையைப் 'பட்டினப்பாலை' குறிப்பிடுகின்றது?

3. ''மாயோன் அன்ன'' ... எனத் தொடங்கும் பாடல் எந்த நூலில் இடம் பெறுகிறது?

4. 'தாய்க்குரைத்த பத்து' என்ற பாடல் தொகுப்பு இடம் பெறும் நூல் பெயர் யாது?

5. கலித்தொகைப் பாடல்களைத் தொகுத்தவர் யார்?

6. அகநானூற்றின் முப்பெரும் பிரிவுகள் யாவை?

7. சேர அரசர்களின் பெருமையினைக் குறிப்பிடும் நூல் யாது?

8. 'வாயிலோயே' எனத்தொடங்கும் புறநானூற்றுப் பாடலைப் பாடியவர் யார்?

9. பரிபாடலில் வையை பற்றிய பாடல்களின் எண்ணிக்கை யாது?

10. பரிபாடல் அகநூலா? புறநூலா?

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) பட்டினப்பாலையில் 'வருணன் வழிபாடு' குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) 'மருதவளம்' குறித்து பட்டினப்பாலை குறிப்பிடும் செய்திகளை விளக்குக.

12. (அ) 'தாய்க்குரைத்த பத்து' பாடலில் முதல் ஐந்து பாடலின் கருத்தினை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'மலைகண்டன்ன' என்ற நற்றிணைப் பாடலின் கருத்தினை தோழி கூற்று வாயிலாக விளக்குக.

13. (அ) அகநானூற்றில் குறிஞ்சித்திணைப் பாடலின் கருத்தினை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'கானலும் கழறாது' எனத் தொடங்கும் நெய்தல் திணைப் பாடலின் கருத்தினை விளக்குக.

14. (அ) புறநானூற்றில் 'ஈயென இரத்தல்' என்ற பாடலின் கருத்தினை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'கேட்டல் மாத்திரை' எனத் தொடங்கும் கோப்பெருஞ்சோழன் பாடல் கருத்தினை விளக்குக.

15. (அ) திருமாலின் பெருமையினைப் புலவர் கீரந்தையார் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) நல்லந்துவனார் பாடிய செவ்வேளின் பாடற்கருத்தினை விளக்குக.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் **கட்டுரை** அளவில் விடை தருக.

16. பட்டினப்பாலையில் 'வாணிபம்' குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

17. குறுந்தொகையின் பாடற்கருத்தினைத் தொகுத்து எழுதுக.

18. கலித்தொகையின் பாடற்கருத்தினை விளக்குக.

19. பதிற்றுப்பத்து 'ஏழாம்பத்து'–பாடல்களின் கருத்தினைத் தொகுத்து எழுதுக.

20. 'மலைவரை மாலை' எனத் தொடங்கும் பரிபாடல் பாடலின் கருத்தினை விளக்குக.

———————

**A–8506**

| **Sub. Code** |
|---|
| **4BTA6C2** |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Sixth Semester**

தமிழ்

இலக்கணம் யாப்பும்– அணியும்

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. எழுத்து என்றால் என்ன?

2. அடி என்பது யாது?

3. கலிப்பாவிற்குரிய ஓசை யாது?

4. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

5. தாயணி–எது?

6. ‘பல்முத்து’– எவ்வகை அணி?

7. பின்வருநிலை அணிக்குச் சான்று தருக.

8. ஏது அணியின் இலக்கணம் கூறுக.

9. காப்பியங்களின் பண்பை உணர்த்தும் அணி எது?

10. இரு பொருள்பட அமையும் அணி எது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் இரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) அசையின் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) சீர் என்றால் என்ன? வகைகளைச் சான்றுடன் விளக்குக.

12. (அ) வஞ்சிப்பாவின் பொது இலக்கணம் கூறுக.

(அல்லது)

(ஆ) நேரிசை, இன்னிசை வெண்பாக்களைச் சான்றுடன் விளக்குக.

13. (அ) தன்மை அணியை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) உருவக அணியின் வகைகளுள் மூன்றினை மட்டும் விளக்குக.

14. (அ) "தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே

நாவினால் சுட்ட வடு"– இக்குறளில் பயின்றுவரும் அணியை விளக்குக.

(அல்லது)

(ஆ) நிரல் நிறை அணியைச் சான்றுடன் விளக்குக.

15. (அ) உதாந்த அணி, பரியாய அணி– விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) விரோத அணியின் வகைகளை எடுத்துரைக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. அடியின் வகைகளை விளக்கி வரைக.

17. ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் கூறி அதன் வகைகளைச் சான்றுடன் விளக்குக.

18. உவமை அணியின் இலக்கணம் கூறி அதன் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

19. தற்குறிப்பேற்ற அணி பற்றிக் கட்டுரைக்க.

20. சிலேடை அணியின் இலக்கணம் கூறி அதன் வகைகளை விவரிக்க.

———————

| A–8507 |
|---|

| Sub. Code |
|---|
| 4BTA6C3 |

**B.A. DEGREE EXAMINATION,** NOVEMBER **2019**

**Sixth Semester**

**தமிழ்**

**தமிழின் செம்மொழிப்பண்புகள்**

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு** சொற்களில் விடை தருக.

1. தமிழே உலக முதன்மொழி என்னும் கொள்கையை முதலில் எடுத்துரைத்த மூவர் யார்? யார்?

2. உலகில் எத்தனை மொழிகள் பேசப்படுகின்றன?

3. தமிழ்மொழி அகராதியில் செம்மை என்பதற்குப் பொருள் என்ன கூறப்படுகிறது?

4. 'கிளாசிக்கல்' என்ற சொல் எந்த மொழிச் சொல்லிலிருந்து தோன்றியது?

5. எட்டுத் தொகை நூல்களுள் நானூறு என்னும் எண்ணிக்கையில் குறிக்கப்படுகின்ற நூல்கள் எவையெவை?

6. ஆற்றுப்படை நூல்களின் எண்ணிக்கை எத்தனை?

7. ஓர் செம்மொழியின் தலைமைப் பண்பு அதன் இலக்கிய மரபுடைமையாகும் என்று கூறியவர் யார்?

8. வேளாண் வழி முறைகளைப் பற்றிய நுட்பத்தினை எடுத்துரைக்கும் நூலின் பெயர் என்ன?

9. களிறு எறிந்து பெயரும் வீரர்களைச் சான்றோர் என அழைக்கும் யுகம் எது?

10. சங்கப் பாடல்களின் இலக்கியக் கொள்கையாக எவற்றைக் குறிப்பிடலாம்.

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **இரண்டுபக்க** அளவில் விடை தருக.

11. (அ) உலகமொழிகளின் மூவகை மொழிக் கட்டமைப்பினைக் கூறுக.

(அல்லது)

(ஆ) திராவிட மொழிக் குடும்பங்களின் பகுப்பினை எடுத்துரைக்க.

12. (அ) செவ்வியல் குறித்த அறிஞர்களின் விளக்கங்களைத் தருக.

(அல்லது)

(ஆ) செம்மொழிக்குரிய தகுதிகளை எடுத்துரைக்க.

13. (அ) பத்துப்பாட்டுள் ஆற்றுப்படை நூல்களின் சிறப்பினைக் கூறுக.

(அல்லது)

(ஆ) மணிமேகலை – குறிப்பு வரைக.

14. (அ) தமிழ் இலக்கியத் தன்மையின் வெளிப்பாடுகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தமிழ்ச் செம்மொழியின் நடுவுநிலைமை குறித்து எழுதுக.

15. (அ) தமிழ்ச் செம்மொழி இலக்கியங்களில் கற்பனை இடம்பெறு மாற்றைக் கூறுக

(அல்லது)

(ஆ) தமிழ்ச் செம்மொழி இலக்கியங்களில் இயற்கைப் புனைவு குறித்து விளக்குக.

பகுதி இ (3 × 10 = 30)

**எவையேனும்** மூன்று வினாக்களுக்குக் **கட்டுரை** வடிவில் விடை தருக.

16. உலகச் செம்மொழிகளின் சிறப்பியல்புகளை விவரிக்க.

17. தமிழ் வழக்காறுகளில் செம்மொழிக்கான குறிப்புகள் இடம்பெறுமாற்றை விளக்குக.

18. எட்டுத் தொகையில் புறநூல்களின் சிறப்பினை எடுத்துரைக்க.

19. தமிழ்ச் செம்மொழியின் பண்புகளை விளக்கி வரைக.

20. தமிழ்ச் சொம்மொழி இலக்கியத்தில் நடப்பியல், குறிக்கோளியல் கருத்துக்களை எடுத்தியம்புக.

---

**A–8509**

| Sub. Code |
|---|
| 4BTAE3B |

**B.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2019**

**Sixth Semester**

தமிழ்

**விருப்பப்பாடம் – தன் மேம்பாட்டுயியல்**

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு சொற்களில்** விடையளிக்க.

1. ‘வாழும்வழி’ குறித்து வள்ளுவரின் கருத்து யாது?

2. ‘அன்பாக பேசுவோம்’ என்ற கட்டுரையில் அன்பின் வலிமை குறித்து இரண்டு கருத்தினை எழுதுக.

3. சிலப்பதிகாரத்தில் குறிப்பிடும் மூன்றுகளைக் காட்சிகள் யாவை?

4. ‘இலட்சியத்தில் உறுதி’ – கொலம்பஸ் – குறிப்பு வரைக.

5. பார்வையற்ற நிலையிலும் சாதனையாளராக நிகழ்ந்த இருவரின் பெயரினைக் குறிப்பிடுக.

6. மாற்றுத்திறனாளிகளின் மகத்துவம் குறித்து ‘தத்துவமேதை கதே’ கூறும் கருத்து யாது?

7. வாழ்க்கையில் ஆரோக்கியம் பெற ஔவையின் அமுத வாக்கு யாது?

8. ‘தீதும் நன்றும் பிறர்தர வாரா’ – இவ்வரிகள் யார் கூற்று? இதன் கருத்தினையும் எழுதுக.

9. உலகப் புத்தக நாள் எந்த நாளில் கொண்டாடப்படுகின்றது?

10. தீர்வு காணும் உத்திகளில் ‘ஸ்வாட் ஆய்வு’ SWOT விளக்கம் தருக.

பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் **ஒரு** பக்க அளவில் விடைதருக.

11. (அ) ‘வாய்ப்புகளை நழுவ விடாதீர்கள்’ என்ற கட்டுரையில் வெற்றி பெற்ற சாதனையாளர்கள் குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) அன்பான பேச்சின் அழுத்தை ஆராய்க.

12. (அ) ‘கனவுகள் சாதனையின் திறவுகோல்கள்’ என்ற கட்டுரை உணர்த்தும் செய்திகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) விழிப்புணர்வின் தேவைகளும் அதன் அணுகு முறைகள் குறித்தும் எழுதுக.

13. (அ) ‘தவறு செய்வது மனித இயல்பு’ என்ற இக்கருத்தை ‘குற்றத்தை ஒப்புக் கொள்ளுங்கள்’ கட்டுரை வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) ‘சாதனை கண்ட நிகழ்ச்சிகள்’ என்ற கட்டுரையில் ‘உள்ளுணர்வால் உயர்வடைந்த நிகழ்வு’ குறித்தெழுதுக.

14. (அ) வைகறைத் துயிலெழுதலின் பயன் குறித்து விவரி.

(அல்லது)

(ஆ) ‘கேள்வி ஞானம்’ குறித்து விவரிக்க.

15. (அ) 'நட்பைப் போற்றுங்கள்' – என்ற கட்டுரையின் செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மன அழுத்தத்திற்கான – 'தீர்வுகள்' குறித்து விவரிக்க.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் கட்டுரை வடிவில் விடை தருக.

16. 'உனக்குள் நீ' என்ற கட்டுரை உணர்த்தும் கருத்தினை விவரிக்க.

17. முயற்சி திருவினையாக்கும் என்ற கட்டுரை உணர்த்தும் செய்திகளை மதிப்பிடுக.

18. 'ஒவ்வொரு நாளும் ஓர் உதயம்' என்ற கட்டுரையின் சிறப்பினைத் தொகுத்துரைக்க.

19. 'அறிவை தாராளமயமாக்குங்கள்' என்ற கட்டுரை தரும் செய்திகளை விவரி.

20. 'வெற்றியின் திறவு கோல்கள்' – என்ற கட்டுரை உணர்த்தும் செய்திகளைக் குறிப்பிடுக.

———————